திரு. இல. பலராமன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலத் துறையினால் நடத்தப்படும் இது போன்ற நர்சரி பள்ளிகளை கல்வித் துறையுடன் இணைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதற்கான சிலபஸ் ஏதாகிலும் வகுத்திருக்கிறதா? எதிர்காலத்தில் குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டும், வளர வேண்டுமென்பதற்காக அனாதைக் குழந்தைகள் மட்டும் என்று இல்லாமல், மேலும் அதிகமான குழந்தைகளைச் சேர்க்க அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையங்கள் சமூகநலத் துறையின்கீழ் இயங்கி வருகின்றன. பாடத் திட்டங்கள் சம்பந்தமாக மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதல் போன்றவை பள்ளிக் கல்வித்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்னாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பயிற்சி நிலையங்கள்

60—(*வினா எண் 18876) திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் அமைத்த சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் (1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில்) எத்தனை?

(ஆ) அதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 1981-82, 1982-83ம் ஆண்டுகளில் தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் புதுச்சத்திரம், வடலூர், மங்களம்பேட்டை ஆகிய மூன்று ஊர்களில் கிராமப்புற சுகாதார பயிற்சி நிலையங்களும், கடலூர் அரசு மாவட்ட மருத்துவமனையில் ஒரு சுகாதாரப் பணியாளர் (பெண்) பயிற்சிப் பள்ளியும் ஆக நான்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அவற்றிற்கு ரூ 20.93 லட்சம் செலவிடப்பட்டது.

(முற்பகல் 10-10)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுச்சத்திரம், மங்களம்பேட்டை போன்ற இடங்களில அந்த சுகாதார பயிற்சி நிலையங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை என்பது உண்மைதானா? மேலும் அங்கே இருப்பவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாத நிலைமை இருப்பது உண்மைதானா என்பதையும் இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

அமைச்சர்களின் இலாக்கா மாற்றம்—அவைக்கு அறிவித்தல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்று மாலை வானொலியிலும், இன்றைக்கு காலை செய்தித் தாள் மூலமும் தொழில் இலாக்காவும் அதேபோல கூட்டுறவு இலாக்காவும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமிருந்து மாற்றப் பட்டுள்ளதாக அறிந்தோம், இலாக்காக்கள் மாற்றப்படுவது முதல் அமைச்சர் அவர்களின் ப்ரோராகேட்டிவ் ரைட். அதை நாங்கள் நன்றாக அறிவோம். ஆனால் பட்ஜெட் தொடர் ஆரம்பித்திருக்கிற இந்த நேரத்தில் இப்படி நேர்ந்திருப்பதைப் போல ஒரு நிகழ்ச்சி இதுவரையில் தமிழக வரலாற்றிலே நடந்தது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கை சம்பந்தப் பட்ட விஷயம் அல்ல; இலாக்கா மாற்றங்கள் என்பது சர்வ சாதாரணமாக நடக்கக்கூடியதுதான்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அதையும் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபைக்கு அறிவிப்பது இல்லை. பார்லிமெண்டில் அப்படி நடப்பதில்லை.

திரு. ரா. உமாநாத்: அவை சம்பந்தப்பட்டது என்பதால்தான் நாங்கள் ரெய்ஸ் பண்ணுகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இங்கே இருப்பதால் இதுபோன்று ஒரு முக்கியமான இலாக்கா மாறுதல் செய்ததற்கு என்ன காரணம் என்பதை அவர்கள் மூலமாகவோ அல்லது அவை முன்னவர் அவர்கள் மூலமாகவோ அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தால் அவைக்கு அறிவிக்கலாம், அல்லது அமைச்சர்கள் இராஜினாமா செய்தால் இராஜினாமா செய்கிற அமைச்சர் அவர்கள் விருப்பப்பட்டால் ஒரு அறிக்கை வைக்கலாம். இலாக்கா மாற்றம் என்கிறபோது அவைக்கு அறிவிக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை.